தயாரிப்பு:- S. A. S. டிலக்சனி (BBA)

இ/ ஸ்ரீ கிருஷ்ணா மகா வித்தியாலயம்


**தேர்ச்சி 7.0:** வணிகங்களின் வாழ் தன்மைக்கும் வளர்ச்சிக்கும் பணம் மற்றும் நிதி நிறுவனங்களினால் வழங்கப்படுகின்ற பங்களிப்பு.

**தேர்ச்சி மட்டம் 7.6:** காசோலைகளை பயன்படுத்தி கொடுக்கல் வாங்கல்களை இலகுப்படுத்திக் கொள்ள கூடிய முறைகளை சுட்டிக்காட்டுவார்.

(01).நடைமுறை வைப்பு உரிமையாளர் ஒருவரினால் அதில் குறிப்பிட்டுள்ள தொகையினை பெயர் குறிப்பிடப்பட்ட நபருக்கு அல்லது கொண்டு வருபவருக்கு செலுத்துமாறு வங்கிக்கு இடும் எழுத்து மூலமான கட்டளைக் “காசோலை” எனப்படும்.

I. காசோலையுடன் தொடர்புடைய பிரதான பிரிவினர்கள் யாவர்?
II. காசோலையின் அடிப்படை பண்புகள் யாவை?
III. காசோலையின் இரு வகைகள் யாவை?
IV. காசோலை ஒன்றை எழுதும் போது கவனத்தில் கொள்ள வேண்டிய விடயங்கள் யாவை?

(02). காசோலையின் முகப்பில் குறுக்காக இரு சமாந்தர கோடுகளை வரைதல் அல்லது வணிக வங்கி ஒன்றின் பெயரை எழுதுதல் “காசோலையில் கோடிடல்” எனப்படும்.

I. காசோலையில் கோடிகளின் முக்கியத்துவத்தை விபரிக்குக.
II. காசோலையின் கோடிடல் இரு பிரதான வகைகளும் யாவை?
III. காசோலையில் பெறுவான் கணக்கு மட்டும் எனும் பதம் கூறுவது யாது?

(03). காசோலையின் முகப்பில் குறிப்பிடப்பட்டுள்ளவாரே பெறுபவர் தனது பெயரை காசோலையின் பின் பக்கத்தில் எழுதுதல் “புறம் குறிப்பிடுதல்” எனப்படும்.

I. காசோலையில் புறம் குறிப்பிடல் தேவைப்படுகின்ற சந்தர்ப்பங்கள் யாவை?

II. காசோலை ஒன்று மறுக்கப்படுகின்ற சந்தர்ப்பங்கள் ஐந்தினை தருக